# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2160 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

### இலங்கைப் பொலிஸ்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 01 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2020.03.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

03. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480.00 - 7 × 3,600 - 27 × 4,440 - ரூபா 4,99,560.00.

பொது நிர்வாக சுற்று நிருபம் இலக்கம் 3-2016 இன் பிரகாரம் சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும் இவ் உத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்று நிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதம் தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.00 ;
(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படை சம்பளத்தில் 40% கொடுப்பனவாக குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் ரூபா 11,816.00
(இ) கடினக் கொடுப்பனவுகள் ரூபா 2,000.00 ;
(ஈ) இடைக்கால கொடுப்பனவு : ரூபா 2,500.00
(உ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250.00 ;
(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 10,500.00 (ஆகக்கூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)
(எ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 9,800.00 (ஆகக்கூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கைப் பொலிஸ் சேவையில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**-
க.பொ.த. (சா. தர.) பரீட்சையில் கணிதம் /தாய்மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது அமர்வில் ஒரே முறையில் 05 பாடங்களில் கணிதம்/தாய் மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைத்திருத்தல் வேண்டும்).

**குறிப்பு 01.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும் இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 02.**- க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 03.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர.) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) **பௌதீகத் தகைமைகள் :**

* உயரம் : 05 அடி 04 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* மார்பு : 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின் படி தகைமை பெறுவர்.

(ஈ) **பார்வை தொடர்பான தேவை.**- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) **பிற தகைமைகள்.**- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவராக கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே இலங்கைப் பொலிஸில் சேவையாற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இந்நிபந்தனை மாத்திரம் ஏற்புடையதாகாது.

05. **ஆட்சேர்ப்பு முறை.**-
விண்ணப்பங்களின் படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற் தகுதிப் பரீட்சை, தன்னம்பிக்கையை சோதிப்பதற்கான பரீட்சை, ஆரம்ப சக்தி மற்றும் பிரதிபலிப்பு சம்பந்தமான பரீட்சைகளில் பங்கு பற்றி அதிலும் சித்தியெய்தல் வேண்டும்.

* உடற் தகுதிப் பரீட்சை
  1000 மீற்றர் ஓட்டம் - 3 நிமிடம் 44 விநாடிகள்

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இந் நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

  எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

  * 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல். (காலம் : 45 நிமிடங்கள்)
  * பொது அறிவும் மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை (காலம் : 01 மணித்தியாலம்)

06. **மருத்துவப் பரிசோதனை.**- விண்ணப்பதாரர் தனது நியமனத்தை பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்புச் செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின் படி தெரிவு செய்யப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர். மருத்துவ பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடல்நலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவ பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

---

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, சனவரி மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

07. **பின்னணி விசாரணைகள்.-**

(அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணங்கள் இருந்தால் அவ் விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

08. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல்.-**

* பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2007.04.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவைக்கு/ மாகாண அரசாங்க சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
* நியமனத் திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்கள் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

09. **நியமனக் கொள்கைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்.-**

(அ) நியமனம் 03 ஆண்டுகால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர் மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படும் விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் மற்றும் II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ்செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யயப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 03 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுநர் சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப் பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக சத்தியப் பிரமாணம் /உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரசாங்க சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I ( II அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது.)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ் ;
(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;
(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களினூடாக சமர்ப்பித்தல். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11 × 8 அங்குல அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

14. இவ் அறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு.-** பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்குப் போக்குவரத்துச் செலவுகளோ பிற செலவுகளோ இலங்கை பொலிஸினால் வழங்கப்படமாட்டாது.

சீ. டி. விக்கிரமரத்ன,
பிரதிப் பொலிஸ் மாஅதிபர்.

| |
|---|
| அலுவலக பாவனைக்கு |
| அளவு 2" × 2 1/2" |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இல. வீடு :-----. கையடக்க தொலைபேசி இல. :------.

6. (அ) இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால், பிறந்த இடம் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

8. உயரம் : அடி :----- அங்குலம் :----- மார்பு : (அங்குலம்) -----

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

.................,
(நிறுவனத் தலைவரின் கையொப்பம்)
பதவி முத்திரை இடப்படவேண்டும்.

பதவி :-----.
திகதி :-----.

01-584/1

---

**இலங்கைப் பொலிஸ்**

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2020.03.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 3,54,480.00 - 7 × 3,600 - 27 × 4,440 - ரூபா 4,99,560.00.

பொது நிர்வாக சுற்று நிருபம் இலக்கம் 3-2016 இன் பிரகாரம் சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்று நிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதம் தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : ரூபா 7,800.00 ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படைச் சம்பளத்தில் 40% கொடுப்பனவாக குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் ரூபா 11,816.00

(இ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000.00 ;

(ஈ) இடைக்கால கொடுப்பனவு : ரூபா 2,500.00

(உ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250.00 ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 10,500.00 (ஆகக்கூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)

(எ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 9,800.00 (ஆகக்கூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டும் நிதி உதவிகள் வழங்கப்படும்) ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள், கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றுவதற்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**-
* க.பொ.த. (சா. தர.) பரீட்சையில் கணிதம் /தாய்மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு அமர்வுகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது அமர்வில் ஒரே முறையில் 05 பாடங்களில், கணிதம்/ தாய் மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41, 44 உம் ஒரு பாடமாகவும் இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.

**குறிப்பு 2.**- க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர.) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) **பௌதீகத் தகைமைகள் :**

* உயரம் : 05 அடி 02 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதித் தேவைப்பாடுகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைப் படி தகைமை பெறுவர்.

(ஈ) **பார்வை தொடர்பான தேவைப்பாடு.**- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) **பிற தகைமைகள்.**- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவர்களாக கருதப்படுவர்).

5. **ஆட்சேர்ப்பு முறை.**-
விண்ணப்பங்களின் படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற் தகுதிப் பரீட்சையில் பங்கு பற்றி அதிலும் சித்தியெய்தல் வேண்டும்.

* உடற் தகுதிப் பரீட்சை
1000 மீற்றர் ஓட்டம் - 5 நிமிடம் 14 விநாடிகள்

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இவ் நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
இவ் எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :
 * 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல். (காலம் : 45 நிமிடம்)
 * பொது அறிவும் மற்றும் நுண்ணறிவு பரீட்சை (காலம் : 1 மணித்தியாலம்)

6. **வைத்தியப் பரீட்சை.**- விண்ணப்பதாரர் தனது நியமனத்தை பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்புச் செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின் படி தெரிவு செய்யப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர். மருத்துவ பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடல்நலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவ பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

7. **பின்னணி விசாரணைகள்.**-
(அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணங்கள் இருந்தால் அவ் விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல்.**-
* பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/ 2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதி சுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவைக்கு/ மாகாண அரசாங்க சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும், சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

* நியமனத் திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் இரண்டாம் அரச கரும மொழியில் சித்தியடைந்தவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சி அடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **பதவியிலமர்த்தும் நியதிகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். நீங்கள் விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கும் உரித்துடையவர்.

10. **சேவை நிபந்தனைகள்.**-

(அ) நியமனம் 03 ஆண்டுகால தகுதிகாண் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் மற்றும் II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் II இன் பிரகாரமும் மற்றும் 1952/ 2006 ஆம் இலக்க 2006.10.19 ஆந் திகதிய 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதி பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யபப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 03 வருட தகுதிகாண் கால நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் காலம் வரை அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகள் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப் பெறுமதி பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி

விலகலை ஏற்றுக்கொள்வதானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புண்டு.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது.)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாக பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற் பிரதி.

13. (அ) தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இச்சான்றிதழ் இல்லாமல் விண்ணப்பம் அனுப்பினால் அது நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11 × 8 அங்குல அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த ஒரு உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ் அறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்குப் போக்குவரத்துச் செலவுகளோ பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

சீ. டி. விக்கிரமரத்ன,
பிரதிப் பொலிஸ் மாஅதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| அலுவலக பாவனைக்கு<br>2 × 2 1/2 அங்குலம் |

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதியை இணைக்கப்படல் வேண்டும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பவேண்டிய முகவரி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் வதிவிடம் :-----. கையடக்க தொலைபேசி இல. :------.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) வம்சாவழி மூலம் இலங்கைப் பிரசையானால், பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

8. உயரம் : அடி :----- அங்குலம் :-----

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) ------------------------.
(ஆ) ------------------------.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :------------------------.
ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :------------------------.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவை யென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் இலங்கைப் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ...................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவை யாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

.................,
(நிறுவனத் தலைவரின் கையொப்பம்)
பதவி முத்திரை இடப்படவேண்டும்.

பதவி :-----.
திகதி :-----.

01-584/2

---

**இலங்கைப் பொலிஸ்**

பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி

இலங்கைப் பொலிஸ் சேவையில் பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 01 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2020.03.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

03. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 3,54,480.00 - 7 × 3,600 - 27 × 4,440 - ரூபா 4,99,560.00.

பொது நிர்வாக சுற்று நிருபம் இலக்கம் 3-2016 இன் பிரகாரம் சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

* மேலும் இவ் உத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்று நிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதம் தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800.00 ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/2016 இற்கு அமைய அடிப்படை சம்பளத்தில் 40% கொடுப்பனவாக குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் ரூபா 11,816.00

(இ) கடினக் கொடுப்பனவுகள் ரூபா 2,000.00 ;

(ஈ) இடைக்கால கொடுப்பனவு : ரூபா 2,500.00

(உ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250.00 ;

(ஊ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 10,500.00 (அதிகூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)

(எ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 9,800.00 (அதிகூடியது விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 19-29 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**-
க.பொ.த. (சா. தர.) பரீட்சையில் கணிதம் /தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 05 பாடங்களில் கணிதம்/தாய் மொழி இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்திலேனும் சித்தியடைத்திருத்தல் வேண்டும்).

**குறிப்பு 01.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞானப் பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும் இல. 42, 45 ஐக் கொண்ட கணிதப் பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 02.**- க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 03.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர.) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) **பௌதீகத் தகைமைகள் :**

* உயரம் : 05 அடி 03 அங்குலம் (ஆகக் குறைந்தது)
* மார்பு : 30 அங்குலம் (ஆகக் குறைந்தது மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடன் தேசிய விளையாட்டுக் குழாத்திலிருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின் படி அடிப்படைத் தகைமை பெறுவார்.

(ஈ) **தொழில் தகைமைகள் :**

(i) இலகு வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.
(ii) மேற்குறிப்பிட்ட சான்றிதழை பெற்ற பின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு, வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நெடுங்காலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும் உடல் அவயவங்களின் இயக்கத்துக்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்மானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் அவர் இப்பதவிக்கு தகுதியற்றவராக கருதப்படுவர்.

* அடிப்படைத் தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரர் வாகனம் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அது போலவே வீதிகள் போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள அறிவு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்கள் இயந்திர தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

(உ) **பார்வை தொடர்பான தேவை.**- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் சேவைக்கு தகைமை அற்றவராவார்.

(ஊ) **பிற தகைமைகள்.**- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் (விவாகரத்துப் பெற்றவர்கள் தகுதியற்றவராக கருதப்படுவர்).

5. **ஆட்சேர்ப்பு முறை.**-
விண்ணப்பங்களின் படி தகைமையைப் பெறும் விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற் தகுதிப் பரீட்சையில் பங்கு பற்றி அதிலும் சித்தியெய்தல் வேண்டும்.

* உடற் தகுதிப் பரீட்சை
1000 மீற்றர் ஓட்டம் - 3 நிமிடம் 44 விநாடிகள்

* உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

6. **தொழில்சார் பரீட்சை - பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி.**-

6.1 இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையின் உதவி பணிப்பாளரினால் தொழில்சார் பரீட்சை நடாத்தப்படும்.

6.2 தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் -

(அ) வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்

(ஆ) வீதிச்சட்ட அறிவுரை - 25 புள்ளிகள்

(இ) வாகனப் பராமரிப்பு மற்றும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்

6.3 தொழில்சார் பரீட்சை.- வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 25 புள்ளிகளும் வீதிச்சட்ட அறிவுரை புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப்பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப் புள்ளிகள் 100 இல் ஆகக்குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்படுவர்.

**குறிப்பு.**- சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பயிலுநர் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையை பெற பொலிஸ் வித்தியாலயத்தில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

7. **மருத்துவப் பரிசோதனை.**- விண்ணப்பதாரர் தனது நியமனத்தை பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்புச் செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, முன்னுரிமை மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலின் படி தெரிவு செய்யப்படுவர். மருத்துவப் பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர். மருத்துவ பரிசோதனை பிரதான மருத்துவ உத்தியோகத்தரினால் உடல்நலம் இல. 169 படிவத்திற்கமைய அறிக்கை தயாரிக்கப்படும் என்பதுடன் மருத்துவ பரிசோதனை ஒரே தடவையில் நடைபெறும்.

8. **பின்னணி விசாரணைகள்.**-
(அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். பின்னணி விசாரணைகளில் ஏதேனும் பாதகமான காரணங்கள் இருந்தால் அவ் விண்ணப்பதாரர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அல்லது அதை மூடி மறைப்பது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

9. **அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல்.**-
* பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2007.04.28 ஆந் திகதி வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவைக்கு/ மாகாண அரசாங்க சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை சேவையில் இணைந்த திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

* நியமனத் திகதியில் இருந்து 05 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெறாத உத்தியோகத்தர்கள் சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

10. **நியமனக் கொள்கைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/ தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

11. **சேவை நிபந்தனைகள்.**-

(அ) நியமனம் 03 ஆண்டுகால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தவும் ஏற்கனவே விதிக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் விதிக்கப்படும் விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் மற்றும் II ஆம் தொகுதிகளிலான ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்கு விதிகள், பொலிஸ் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்படல் வேண்டும்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இலங்கைப் பொலிஸினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியெய்தல் வேண்டும். குறித்த பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும், 1973.02.28 ஆந் திகதிய மற்றும் 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/2006 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் 2007.08.09 ஆந் திகதிய திருத்தஞ்செய்யப்பட்ட அச்சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யயப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 03 வருட பயிலுநர் நிலையில் இலங்கைப் பொலிஸில் பணியாற்ற வேண்டியதுடன் இப்பயிலுனர் சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப் பெறுமதியானது இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்ளலானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக சத்தியப் பிரமாணம் /உறுதி செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அபிமானம் மிக்க அரசாங்க சேவைக்கான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுய உறுதி செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் இலங்கைப் பொலிஸில் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

12. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I ( II அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய மற்றும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

13. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது.)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ் ;
(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின் மாத்திரம்) ;
(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி;
(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.

14. (அ) தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது நிறுவனத் தலைவர்களினூடாக சமர்ப்பித்தல். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11 × 8 அங்குல அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த ஒரு உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை பிரத்தியேகமாக கையளித்தலாகாது.

15. இவ் அறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்குப் போக்குவரத்துச் செலவுகளோ பிற செலவுகளோ இலங்கை பொலிஸினால் வழங்கப்படமாட்டாது.

சீ. டி. விக்கிரமரத்ன,
பிரதிப் பொலிஸ் மாஅதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக பாவனைக்கு<br>அளவு 2" × 2 1/2" |
|---|

**இலங்கைப் பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) கடிதம் அனுப்பும் முகவரி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----. கையடக்க தொலைபேசி இல. :------.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால், பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

8. உயரம் : அடி :----- அங்குலம் :----- மார்பு : (அங்குலம்) -----

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. (அ) வாகனம் ஓட்டும் அனுமதிபத்திர இலக்கம் :-----.
(ஆ) வாகனம் ஓட்டும் அனுமதி பத்திரம் பெற்ற திகதி :-----.
(இ) திறமை பெற்ற வாகனங்களின் வகுப்புகள் :-----.
(சான்றிதழின் பிரதிகளை இணைக்கவும்)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

13. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

14. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-
(அ) -----.
(ஆ) -----.

16. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
ஆம் எனின், அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின், குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின், அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின், விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின், விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் இலங்கை பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

21. நிறுவகத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

.................,
(நிறுவனத் தலைவரின் கையொப்பம்)
பதவி முத்திரை இடப்படவேண்டும்.

பதவி :-----.
திகதி :-----.

01-584/3

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களை சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020**

## REGISTRAR GENERAL DEPARTMENT

## Open Competitive Examination for Class III Grade II of the Registrars Service -2020

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின், பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பரீட்சை

2020, மே மாதம் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை பெறுபேறுகளுக்கிணங்க கூடிய புள்ளிகளை பெறும் பரீட்சையாளர்கள் இப்பதவிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படுவர். இப்பரீட்சை கீழ் காணப்படும் நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்கள் மற்றும் நகரங்களுக்குரிய நகர இலக்கங்கள் கீழ் காணப்படுகின்றது. போதுமானளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அல்லது வேறு காரணங்களினால் அல்லது ஏதாவது பரீட்சை நிலையத்தினை இரத்து செய்து பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பின் பிரகாரம் பரீட்சை நிலையத்தினை தீர்மானிக்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளருக்கு உரியது. மேலும் உத்தேசித்த நகரங்கள் அனைத்திலும் கூடிய எண்ணிக்கையான பரீட்சை மத்திய நிலையத்தினை நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை இல்லாதவிடத்து பரீட்சையானது கொழும்பில் நடாத்துவதற்காக பரீட்சை ஆணையாளர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| அம்பாறை | 05 |
| அநுராதபுரம் | 06 |
| பதுளை | 07 |
| இரத்தினபுரி | 08 |
| குருநாகல் | 09 |

இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு திணைக்கள தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**சேவை நிபந்தனைகள்.-**

அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளும், இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக பதிவாளர் சேவை III ஆம் வகுப்பின் II ஆம் தர பதவிக்கு ஆட்சேர்க்கப்படும்.

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தானதுமாகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையினை செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச சேவையின் பொது நிபந்தனைகளுக்கும், இது வரை வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் காலத்துக்கு காலம் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்படல் வேண்டும். அவ்வாறே தாபனக் கோவையின் II அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையான பிரிவுகளுக்கும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடவடிக்கையின் ஒழுங்குமுறையின் I ஆவது காண்டத்தின் அத்தியாயத்திற்கும் உட்படல் வேண்டும்.

(iii) சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு பயிற்சிக்கு உட்படல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(v) அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் ஒரு வருடம் பூர்த்தியாகும் வரை பதில் சேவை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

(vi) பதவியில் நியமனம் பெற்று மூன்று வருடங்கள் முடிவதற்குள் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் தாபனத்தினால் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடை தாண்டல் எழுத்துப் பரீட்சையில் சித்திப்பெறல் வேண்டும். வயதினை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறன்காண் தடை தாண்டலில் விடுப்பு வழங்கப்படமாட்டாது.

(vii) பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டதன் பின் அரசாங்க சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களின் முன்னைய சேவையின் அங்கத்துவம் முடிவுறுவதோடு, அச்சேவைக்கு மீள தீரும்புவதற்கான உரித்து இல்லாது போகும்.

04. **சம்பள அளவுத்திட்டம்.-** MN-5-2016 - ரூபா 34,605.00-10×660-11×755-15×930-ரூபா 63,460.00 அ. நி. சு. 3/2016

05. **வயதெல்லை.-** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தில் வயது 21 வருடங்களுக்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ("அதற்கிணங்க 1999.02.24 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்பதாக மற்றும் 1985.02.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியுடைய நபர்களுக்கு மட்டும் இதற்காக தகைமை உள்ளது.)

06. **தகைமைகள்.-** 2020.02.24 ஆந் திகதிக்கு கீழ் காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசைகளாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்டதாரியாக இருத்தல்.

அல்லது

(iii) சட்ட கல்லூரியினால் நடாத்தப்படும் இறுதி சட்டப் பரீட்சையில் சித்தி பெற்று உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த சட்டத்தரணியாக இருத்தல்.

07. சேர்த்துக்கொள்ளப்படும் முறை.- 02 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சையில் சித்திப் பெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக புள்ளிகளைப் பெறல் வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களை தெரிவு செய்து, அவர்களின் அப்புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு இணங்க, மேலதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் ஒழுங்குமுறையில் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சான்றிதழ்களினை பரிசீலனை செய்தலுக்காக மட்டுமே சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

08. பரீட்சைக் கட்டணங்கள்.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும்.

இப்பரீட்சைக்கட்டணம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கும் விதத்தில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால்/ உபதபால் அலுவலகத்திற்கு பணத்தினை செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். இப்பரீட்சை கட்டணத்திற்காக பணக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் எக்காரணத்திற்காகவும் திருப்பி செலுத்துவதற்கு அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானது.

09. விண்ணப்பிக்கும் முறை.- (அ) விண்ணப்பப்பத்திரமானது இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாதிரி படிவத்திற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்பத்திரத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடவும். அதனை கடதாசியின் இரு பக்கத்தினையும் உபயோகித்து, 8 1/2" × 12" விசாலமுடைய கடதாசியில் தயாரிக்குக. மாதிரி விண்ணப்பப்படிவத்தின் விடயங்கள் 1 தொடக்கம் 7 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும் தயாரிக்குக. மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு பொருந்தாத விண்ணப்பப்பத்திரங்கள், பூரணமற்ற தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்பத்திரங்கள் தகவலளிக்காமல் இரத்துச் செய்யப்படும். அவ்வாறே பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதா என விண்ணப்பதாரர் விசாரித்து அறிந்துகொள்வதோடு, அவ்வாறு இன்றேல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானது.

(ஆ) விண்ணப்பத்தினை பூரணப்படுத்தல், விண்ணப்பதாரர் தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெற்ற மொழியிலேயே விண்ணப்பத்தை பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் 2020.02.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பதிவுத் தபாலில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (தாபனம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்கிளை), இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் இடப்பட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களை சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு.-** அரசாங்க சேவையில்/ மாகாண சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் தங்களது திணைக்கள தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஈ) அனைத்து வகைகளிலும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் இடுகையில் விண்ணப்பப்பத்திரங்கள் காணாமல் போதல் அல்லது தாமதித்தல் சம்பந்தமாக செய்யப்படும் எந்தவொரு முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(உ) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. உரிய பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தி, உரிய விதத்தில் விண்ணபத்தினை பூர்த்தி செய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுமதி அட்டைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அனுப்பப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடனேயே அது பற்றிய பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகளாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (தாபனம் மற்றும் உள்நாட்டு பரீட்சை) கிளையில் விசாரணை மேற்கொள்ள முடியும். அவ்வாறு விசாரணையினை மேற்கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம் மற்றும் முகவரியினை சரியாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியிலான வதிவிடதாரியாயின், அவ்விபரங்களுடன், பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியினை கூடிய விரைவில் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தினை குறிப்பிட்டு விண்ணப்பக் கடிதத்தினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பெக்ஸ் இலக்கத்திற்கு சமர்ப்பித்து விசாரணையினை மேற்கொள்ளல் கூடிய பயனைத் தரும். அவ்வாறு விசாரணையினை மேற்கொள்ளும் பொழுது பரீட்சை திணைக்களத்தில் விசாரணை செய்யப்படும் எந்தவொரு தகவல்களினையும் உறுதிப்படுத்துவதற்காக தன் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் விண்ணபத்தினை தபாலில் இடும் பொழுது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினை தயார் நிலையில் வைத்திருத்தல் உபயோகமானதாகும்.

10. பரீட்சை நிலையத்திற்குள் உட்புகுதல்.-

(i) பரீட்சைக்குதோற்றும்பரீட்சார்த்திகள்,பரீட்சை நிலையத்தின் நிர்வாகியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய பிரவேசப்பத்திரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். தனது பிரவேசப்பத்திரத்தினை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கு தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது.

(ii) அனைத்து பரீட்சார்த்திகளும் தனக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சையாளர்களால் கடைப்பிடிக்க வேண்டிய பொது சட்டத்திட்டங்களுக்கு உட்படல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்திக்கு பிரவேசப்பத்திரத்தினை வழங்கல், அவர் அல்லது அவள் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கருதப்படக்கூடாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.-** தான் தோற்றும் அனைத்து பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நிலைய நிருவாகி திருப்திப்படும் விதத்தில் தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அது சம்பந்தமாக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

12. உண்மைக்கு புறம்பான தகவல்களை வழங்குதல்.-

(அ) பரீட்சையாளர் தகைமையற்றவராக தெளிவாகினால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலப்பகுதியில் அல்லது பரீடசைக்கு பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த தகைமையினை இரத்துச் செய்வதற்கு இடமுண்டு.

(ஆ) பரீட்சை நடாத்தப்படல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி உட்படல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்படல் வேண்டும்.

13. இவ் ஒழுங்குவிதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் சம்பந்தமாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

14. பரீட்சை நடைமுறைகள்.-

(i) மொழி மூலம்:-

(அ) சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணபத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்திலேயே அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(இ) தனது விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) பாடங்களும் அது தொடர்பான விபரங்களும் :

பரீட்சையானது, கீழ்க் காணப்படும் விடயங்கள் சம்பந்தமான எழுத்துமூல வினாப்பத்திரங்களை உள்ளடக்கியதாகும்.

| விடயம் | விடய இலக்கம் | கால அளவு | அதிகூடிய புள்ளிகள் | சித்திக்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| நுண்ணறிவு | 01 | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| பொது அறிவு | 02 | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழி இயலுமை | 03 | 01 மணித்தியாலம் | 100 | 40 |

விடய விபரங்கள்

| வினாத்தாள் | விடய விபரங்கள் |
|---|---|
| நுண்ணறிவு<br>வினாத்தாள்கள் தெரிவு செய்யப்பட்ட மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடிய 50 வினாக்களுடன் கூடியது. | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான ஆராயும் திறன் மற்றும் வாய்மொழி மூலமல்லாத விடயத்துடன் தொடர்புடையதான தகவல்கள் பற்றிய ஆற்றல் மற்றும் நுண்ணறிவினை பரிசீலிக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்படும் வினாப்பத்திரங்கள். |
| பொது அறிவு<br>வினாத்தாள்கள் தெரிவு செய்யப்பட்ட மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடிய 50 வினாக்களுடன் கூடியது. வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்க வேண்டும். | இலங்கையின் சமூக மற்றும் கலாசார முறைகள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் சம்பந்தமான பரீட்சார்த்தியின் பொது அறிவினை பரீட்சிப்பதற்கான வினாப்பத்திரங்கள். |
| மொழி இயலுமை<br>வினாத்தாள்கள் தெரிவு செய்யப்பட்ட மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடியது. வினாக்கள் அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும். | தரப்படும் தலைப்பு மற்றும் கருப்பொளின் கருத்து மற்றும் தகவல்களினை சமர்ப்பித்தல் கோவையிடல் மற்றும் தகவல் பரிமாற்றம் சம்பந்தமாக பரீட்சார்த்தியின் அறிவை சோதித்தல். |

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் மொழிகளுக்கிடையில் ஏதாவது ஒத்துப்போகாத தன்மை இருக்குமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலிற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ A3,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, நவெம்பர் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களை சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020**

**REGISTRAR GENERAL DEPARTMENT**

**Open Competitive Examination for Recruitment to Post of Registrars Service Grade II of Class III-2020**

பரீட்சைக்கு தோற்றுவதற்கான மொழி மூலம்
(சிங்களம் 2/ தமிழ் 3)
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்.)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

* வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்ற எதிர்ப்பார்க்கும் நகரத்தின் இலக்கத்தினை குறிப்பிடவும்.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

1. (i) முழுப்பெயர் (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. முழு முகவரி :
(i) நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(ii) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(iii) அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

3. பால் :- பெண் – 1
ஆண் – 0
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்.)

4. விவாகமானவரா/ விவாகமாகாதவரா :- விவாகமானவர் - 01
விவாகமாகாதவர் - 02
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்.)

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

5.1 பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

5.2 2020.02.24 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

06. கையடக்க தொலைபேசி இலக்கம் :

07. பரீட்சைக்காக தோற்றுவதற்கு தாங்கள் தகைமை பெற்ற பரீட்சை அறிவித்தலின் எந்த பந்தியின் கீழ் என்பது :-----.

(6 (ii) அல்லது 6 (iii) :.............
7.1 6 (ii) பந்திக்கு கீழாயின் :
பெற்ற பட்டம் :................
தகைமையை பூர்த்தி செய்த திகதி :.............
6 (iii) பந்திக்கு கீழாயின்
நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :.............

பணப் பற்றுச்சீட்டின் ஒரு ஓரத்தினை இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தங்கள் வசம் வைத்திருக்கவும்.)

08. கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :..................
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :.......................
(iii) செலுத்திய கட்டணம் :.......................

09. விண்ணப்பதாரரது உறுதியுரை :

இவ் விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சைக்கட்டணம் செலுத்திய இலக்கம் .............. மற்றும் .......... ஆந் திகதிய பற்றுச்சீட்டினை இதில் இணைத்துள்ளதாக பிரதிக்கினை செய்கின்றேன். பரீட்சைகள் ஆணையாளர் மூலம் நடாத்தப்படும் சட்டதிட்டங்களுக்கிணங்க செயலாற்றுவதற்கும், இப்பரீட்சை சம்பந்தமான நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகைமையற்றவர் என தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் எனது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும், நியமனம் பெற்ற பின்னர் தெரிவாயின், நான் இழப்பீடின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் இணங்குகின்றேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. மாதிரி விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்–

மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட திரு./ திருமதி/ செல்வி ...................... அவர்கள் எனக்கு தெரிந்தவர் எனவும், இன்றைய தினம் எனது முன்னிலையில் அவரின் கையொப்பத்தினை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் அவர் பரீட்சைக்கு உரிய பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடவும்)

11. திணைக்களத் தலைவரின் சிபாரிசு–

மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட திரு./ திருமதி/ செல்வி ................................................ அவர்கள் இந்த நிறுவனத்தில் சேவையாற்றுபவர் எனவும், அவர் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், இப்பதவிக்காக தெரிவு செய்யப்படின் இந்த நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிப்பதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

------,

திணைக்களத்தின்/ நிறுவன தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடவும்.)

01-634

---

**சட்டவரைஞர் திணைக்களத்தில் தரம் II பதிப்பாசிரியர்களுக்குமான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை –2019**

01. சட்டவரைஞர் திணைக்களத்தின் பதிப்பாசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான இயைபான அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பதிப்பாசிரியர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, 2020, மே மாதத்தில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. (i) இப்பரீட்சையானது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படுமென்பதுடன், பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் தொடர்பாக அவரினால் விதிக்கப்பட்ட விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தோராகவும் உள்ளனர். பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்ட விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் தனிவேறாக அச்சிடப்பட்டுள்ளன. எவரேனும் பரீட்சார்த்தியினால் இவ்விதிகள் மீறப்படின், அவர் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

03. **பரீட்சைக் கட்டணம்**.– முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்குக் கட்டணங்கள் எவையும் விதிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்தி அடுத்துப்பின்னரான ஏதேனும் தடவையில் இப்பரீட்சைக்குத் தோற்றுமிடத்து, பரீட்சைக் கட்டணமாக 500.00 ரூபா விதிக்கப்படும். பரீட்சைக் கட்டணங்கள், பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் 20-03-02-13 என்ற வருமானத் தலைப்பின் வரவுக்கு இலங்கையிலுள்ள ஏதேனும் அஞ்சலகத்தில் செலுத்தப்படலாம் என்பதுடன், வழங்கப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டப்படுதலும் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைப் பரீட்சார்த்தி தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கலாம்). செலுத்தப்பட்ட கட்டணங்கள் எச் சூழ்நிலைகளின் கீழும் மீளளிக்கப்பட மாட்டாது அல்லது வேறேதேனும் பரீட்சைக்காகக் கைமாற்றப்பட மாட்டாது.

04. **விண்ணப்பங்கள்**.– விண்ணப்பமானது இதனோடிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கிணங்கத் தயாரிக்கப்படுதல் வேண்டும். A4 அளவுத் தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பமானது தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 01 முதல் 05 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலிருத்தலும் வேண்டும். மீதிப்பாகம் இரண்டாவது பக்கத்துக்குக் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில், பரீட்சையின் பெயர் சிங்களத்துடன் சேர்த்து மேலதிகமாக ஆங்கிலத்திலும் விண்ணப்பத்தின் தலையங்கத்தில் காணப்படுதல் வேண்டும். அதேபோன்று, தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் பரீட்சையின் பெயர் விண்ணப்பத்தின் தலையங்கத்தில் ஆங்கிலத்திலும் காணப்படுதலும் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்படலாம் ஆனால் அது விண்ணப்பதாரரின் கையெழுத்தில் சரியாகவும் வாசிக்கக் கூடியதாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2020.02.20 ஆந் திகதிக்கு முன்னர் "கொழும்பு, அ.பெ.இல. 1503, பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்புகள் (தாபனம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, பரீட்சைகள் ஆணையாளர்" தலைமையதிபதியை வந்தடையும் வகையில் பதிவஞ்சல் மூலம் திணைக்களத் தலைவரினூடாக அவருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் போது, பரீட்சையின் பெயர் உறையின் மேல் இடதுகைப்பக்க மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்களும் முடிவுறும் திகதிக்குப் பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நிரப்பப்பட்ட விண்ணப்பமானது மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இசைந்தொழுகவிருப்பதனை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இசைந்தொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரர் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும்).

05. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.– ஒவ்வொரு விண்ணப்பதாரரும் எந்தப் பாடம் தொடர்பில் அத்தகைய பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்றாரோ அந்தப் பாடம் தொடர்பில் அவரது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரினது திருப்திக்கு எண்பித்தல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காகப் பின்வரும் ஆவணங்களுள் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:–

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டொன்று;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிபத்திரமொன்று.

மேலும், பரீட்சார்த்திகள், அவர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கென முகத்தையும் காதுகளையும் மூடாமல் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும்.

தமது ஆளடையாளத்தை எண்பிக்க மறுக்கின்ற பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்கும் நேரத்திலிருந்து மண்டபத்தை அவர்கள் விட்டுச் செல்லும் வரை அவர்களின் முகத்தையும் காதுகளையும் மூடுதலாகாது.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளையுடையவர்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் செய்துள்ளனரென்ற ஊகத்தின்மீது பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி, மேற்கூறப்பட்டவாறு தமது விண்ணப்பங்களை அவருக்கு ஆற்றுப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேரசூசியின் பிரதிகளுடன் சேர்த்து அனுமதி அட்டைகளை விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டதனை உடனடுத்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அது பற்றிய அறிவித்தலொன்றைச் செய்தித்தாள்களிலும் அதன் இணையத்தளத்திலும் வெளியிடும். சொல்லப்பட்ட அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னர் அனுமதி அட்டைகளைப் பெறாதுள்ள எவரேனும் விண்ணப்பதாரர்கள் இருப்பின், அத்தகைய பரீட்சார்த்திகள், அவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களினூடாகப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது விண்ணப்பதாரர், அவரது முழுப்பெயரையும், முகவரியையும் தேசிய ஆளடையாள அட்டை இலக்கத்தையும், பரீட்சையின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரர் அத்தகைய விசாரிப்பைச் செய்யும் போது, விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதியொன்றையும், கட்டணங்களைச் செலுத்தும்போது பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், பதிவஞ்சற் பொருளுக்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்றையும் தயாராக வைத்திருத்தலும் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வதிபவராகவிருப்பின், தொலைநகலினூடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அவர் பெறுவதனை இயலச் செய்யும் வகையில் பரீட்சார்த்தியின் தொலைநகல் இலக்கத்தையும் மேலே கொடுக்கப்பட்ட வேறு தகவல்களையும் குறிப்பிட்டு, தொலைநகலினூடாகப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவொரு கோரிக்கைக் கடிதத்தினூடாக விசாரிப்புகளைச் செய்வது பயனுள்ளதாகவிருக்கும்.

07. விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல்

வேண்டும். விண்ணப்பதாரரொருவர், அவருக்கு கொடுக்கப்பட்ட சுட்டெண்ணின் கீழ் அவருக்கு விதித்துரைக்கப்பட்ட மண்டபத்திலும் பரீட்சைத் திகதியன்றும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவரது கையொப்பம் எந்த அனுமதி அட்டையில் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றதோ அந்த அனுமதி அட்டை பரீட்சையின் மேற்பார்வையாளருக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரரொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

08. விண்ணப்பதாரரினால் வகிக்கப்பட்ட பதவியும் விண்ணப்பத்தைச் செய்த நேரத்தில் அவரது வேலைத்தளமும் பரீட்சை தொடர்பான எல்லா விடயங்களுக்கும் இயைபாகவுள்ளதுடன், விண்ணப்பத்தை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் ஏற்படுகின்ற எவையேனும் மாற்றங்கள் கவனத்திற் கொள்ளப்படவும் மாட்டாது.

09. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர்களை இயலச்செய்து பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களுக்கான கடமை லீவைத் திணைக்களத் தலைவர் அங்கீகரித்தல் வேண்டும். பயணச்செலவுகள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

10. இப்பரீட்சையானது தமிழ் மொழி மூலம் மட்டுமே நடாத்தப்படும். விண்ணப்பதாரர் போட்டிப் பரீட்சையினூடாகப் பகிரங்க சேவையைச் சேர்ந்திருப்பின், அவர் எந்த மொழிமூலம் சொல்லப்பட்ட போட்டிப்பரீட்சைக்குத் தோற்றினாரோ அந்த மொழிமூலத்தினூடாக அவர் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டுமென்பதுடன், ஒரு போட்டிப் பரீட்சைக்கும் தோற்றாமல் பகிரங்க சேவையைச் சேர்ந்துள்ள எவரேனும் விண்ணப்பதாரர், அவர் எந்தப் பரீட்சையினூடாகப் பகிரங்க சேவையினுட் பிரவேசிப்பதற்குத் தகைமைபெற்றாரோ அந்தப் பரீட்சைக்கு அவர் தோற்றிய மொழிமூலத்தினூடாக இப்பரீட்சைக்குத் தோற்றுதலும் வேண்டும். விண்ணப்பதாரர் ஒரே மொழியில் பரீட்சையின் எல்லாப் பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரரொருவர், தமது விண்ணப்பத்திற் குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

11. இப்பரீட்சை கொழும்பில் மட்டுமே நடாத்தப்படும்.

12. **பரீட்சை நடவடிக்கைமுறை.**- மேலேயுள்ள பதவிகளுக்கு இயைபான பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டுள்ளது.

| வினாத்தாள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| ஒப்புநோக்கும் பரீட்சை | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

**பாடவிதானம் :**

| பரீட்சையின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| ஒப்புநோக்கும் பரீட்சை | 1. இலக்கணக் குறியீடுகள் அற்ற ஒரு சட்டத்தின் அல்லது வர்த்தமானி அறிவித்தலின் அல்லது துணைவிதிகளின் பாகமொன்றை வரையறுக்கப்பட்டவொரு காலப் பகுதியினுள் ஒப்புநோக்குதலும் சீரமைத்தலும். அத்துடன்<br>2. சரியான எழுத்துக்கூட்டல்கள் அற்ற ஒரு பந்தியை வரையறுக்கப்பட்டவொரு காலப்பகுதியினுள் சீரமைத்தல்.<br>3. சட்டமொன்றின் ஒழுங்கீனமற்ற முறையில் அமைக்கப் பட்ட பாகமொன்றை வரையறுக்கப்பட்டவொரு காலப் பகுதியினுள் விதித்துரைக்கப்பட்ட படிவத்துக்கிணங்க மீளவமைத்தல். |

**குறிப்பு.**

* விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேலேயுள்ள பரீட்சையில் சித்தியடைவதற்குத் தவறியமை சம்பள உயர்வின் பிற்போடுகையை விளைவிக்கும்.

13. விண்ணப்பதாரரொருவருக்கு ஓர் அனுமதி அட்டையின் வழங்குகை, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவுடையவராகவிருப்பதற்கான தகைமைகளை நிறைவேற்றியுள்ளாரென்பதாகக் கருதப்படுதலாகாது.

14. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் சட்டவரைஞரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

15. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமையிருப்பின், சிங்கள அறிவித்தலே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

சட்டவரைஞர்,
சட்டவரைஞர் திணைக்களம்.

சட்டவரைஞர் திணைக்களம்,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டவரைஞர் திணைக்களத்தின் தரம் II பதிப்பாசிரியர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019**

அலுவலகப் பாவனைக்கு மட்டும்

பரீட்சார்த்தி எந்த மொழிமூலம் பரீட்சைக்குத்
தோற்றுவதற்கு உட்கருதுகின்றாரோ
அந்த மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):....................................
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA,.)

1.2 கடைசிப்பெயரை முதலிலும் பின்னைய பெயர்களின் முதலெழுத்தை அதன் பின்னரும் கொடுக்கின்ற பெயர் ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில் பெயர் : ......................................................................
(உதாரணம் GUNAWARDANA H.M.S.K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :..............................................................

02 2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) : ............................................
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அஞ்சலிடப்படும்)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................

2.3 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :..............................................................

2.4 தொலைபேசி இல.: கைத்தொலைபேசி

3. தேசிய ஆளடையாள அட்டை இல. :

4. ஆணா/ பெண்ணா?

4.1 ஆண் - 0
பெண் - 1
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் உட்புகுத்தவும்)

5. பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

6. தற்போதைய பதவி
6.1 பதவி :.....................................
6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :................................................

7. 7.1 நீர் முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றீரா:.........................................
7.2 நீர் முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றாதிருப்பின், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தொகை : ..........................................
7.3 பற்றுச்சீட்டு இல. :..........................................
7.4 திகதி:..................

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (இயைபாகவிருப்பின் மட்டுமே).(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை உம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கலாம்)

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், இவ்விண்ணப்பத்தில் என்னால் சுட்டிக்காட்டப்பட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையவராகவுள்ளேனென்றும்,...............ரூபாவான பரீட்சைக் கட்டணத்தை நான் செலுத்தியுள்ளேனென்றும், பற்றுச்சீட்டானது இத்துடன் இணைக்கப் பட்டுள்ளதென்றும் குறிப்பிடுகின்றேன். பரீட்சையை நடாத்துதலும் பெறுபேறுகளை வழங்குதலும் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கு நான் உடன்படுகின்றேனென்றும் மேலும் குறிப்பிடுகின்றேன்.

......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:............

திணைக்களத் தலைவரின் அல்லது திணைக்களத் தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் முன்னிலையில் விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தின் அத்தாட்சிப்படுத்துகை:**
திரு./திருமதி/செல்வி............................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவரும் எனது திணைக்களத்தைச் சேர்ந்தவருமான அலுவலரொருவராக உள்ளாரென்றும், அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டாரென்றும், விதித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதன் மீது பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளாரென்றும் இத்தால் குறிப்பிடுகின்றேன்.

..............................,
அத்தாட்சிப்படுத்துகின்ற அலுவலரின் கையொப்பம்.

பெயர் :.........................................
பதவிப்பெயர் :.................................
முகவரி:..........................................
திகதி:...........................................
(அலுவலக முறையான இலச்சினையை இடுவதன் மூலம் உறுதிப்படுத்தவும்.)

திணைக்களத்தலைவரின் சான்றிதழ் :

1. இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்களை நான் நுனித்தாராய்ந்தேன் என்றும்; அத்துடன்
2. சம்பந்தப்பட்ட அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவுடையவராக உள்ளாரென்றும்,

சான்றுப்படுத்துகின்றேன்.

..............................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
அலுவலக முறையான இலச்சினையும்.

பெயர் :.........................................
பதவிப்பெயர் :.................................
முகவரி:..........................................
திகதி:...........................................

01-694

---

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், பட்டதாரி மாணவ பயிலிளவல்நிலை (Cadetships)

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் சூரியவெவ தெற்கத்திய வளாகத்தில், பட்டதாரி மாணவ பயிலிளவல்களுக்கான (Undergraduate Cadetships) பொருத்தமான தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 2020.01.24 ஆம் திகதி முதல் 2020.02.14 ஆம் திகதி வரை கோரப்படுகின்றன.

2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் முப்படையின் அலுவலகர் நிலையிலமர்த்தப்பட்டபின் அவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. இப்பட்டதாரி மாணவ பயிலிளவல்கள் (Cadets) பின்வரும் பட்டதாரி பாடநெறிகளைப் பின்வரும் இடங்களில் பயில முடியும்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - இரத்மலானை.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப்பட்டம் (MBBS) (5½ ஆண்டுகள்)

ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்).
iii. சட்டமாணி சிறப்புப்பட்டம் (LLB) (4½ ஆண்டுகள்)
iv. கணினி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4½ ஆண்டுகள்).
v. மென்பொருள் பொறியில்மாணி சிறப்புப்பட்டம். (4½ ஆண்டுகள்).
vi. கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்).
vii. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (3½ ஆண்டுகள்).
viii. முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்).
ix. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்).
x. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்).

தெற்கு வளாகம் - சூரியவெவ

i. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (5½ ஆண்டுகள்).
ii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - (4½ ஆண்டுகள்)
iii. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4½ ஆண்டுகள்)
iv. தகவல் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்)
v. தகவல் முறையியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்)

3.1. பட்டதாரி பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களின் மூன்று படைகளுக்குமான ஒதுக்கீடானது அப்படைப் பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவுக்காக நடாத்தப்படும் மூன்று நேர்முகப்பரீட்சைகளில் தேருநர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

3.2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடிக்கின்ற பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு பிரயோகிக்கத்தக்கவாறு பின்வரும் பட்டமொன்று வழங்கப்படும்.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப் (MBBS) பட்டம்
ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்
iii. சட்டமாணி சிறப்புப்பட்டம் (LLB)
iv. கணினி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்.
v. மென்பொருள் பொறியில்மாணி சிறப்புப்பட்டம்.
vi. கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்.
vii. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவத்துவ விஞ்ஞானமாணி பட்டம்.
viii. முகாமைத்துவ மற்றும் தொழிநுட்ப விஞ்ஞானமாணி.
ix. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி
x. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி
xi. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம்
xii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
xiii. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
xiv. தகவல் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்
xv. தகவல் முறையியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்

3.3. சகல பட்டப்படிப்பு பாடநெறிகளும் ஆங்கில மொழியில் மாத்திரமே நடாத்தப்படும்.

3.4. தெரிவுசெய்யப்படும் பயிலிளவல்கள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றைப் பயில்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

a. **மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி (MBBS) - ஐந்து ஆண்டுகள் (ஆண், பெண்)**
2019 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள்.

b. விமான இயந்திரவியல் / விமான பராமரிப்பு/ உயிரியல் மருத்துவம் / சிவில் / மின் மற்றும் இலத்திரனியல்/ இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு/ கடல்சார் / பொறிமுறையெந்திரவியல் /எந்திர இலத்திரனியல் என்வற்றில் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள், (ஆண், பெண்)
2019 அல்லது 2018 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளும் ஒரு சாதாரண (S) சித்தியும் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடையவர்கள்.

c. **சட்டமாணி சிறப்புப்பட்டம் (LLB) - நான்கரை ஆண்டுகள் (ஆண், பெண்)**
2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்திகள் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையையும் பெற்றவர்கள் இதற்குத் தகுதியுடையவர்கள்.

கணக்கியல், அரசறிவியல், விவசாய விஞ்ஞானம், புவியியல், உயிரியல், உயர் கணிதம், வணிக புள்ளிவிபரவியல், வரலாறு, வணிக கற்கைகள், அளவையியலும் விஞ்ஞான முறையும், இரசாயனவியல், பொருளியல், பௌதீகவியல், கணிதவியல்/இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடக கற்கைகளும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்.

அல்லது

மேலுள்ள பாடங்களிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும் ஏனைய ஒரு அல்லது இரண்டு பாடங்களுக்கும் கீழ்வரும் பாடங்களிலிருந்தும் குறைந்தது மொத்தம் மூன்று சாதாரண சித்திகளைப் பெறுவதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

பௌத்தம்/ பௌத்த நாகரிகம், கிரேக்கம், தமிழ், கிறிஸ்தவம் /கிறிஸ்தவ நாகரிகம், இந்து சமயம் / இந்து நாகரிகம் , லத்தீன் , கிரேக்க உரோம நாகரிகம், இஸ்லாம் / இஸ்லாமிய நாகரிகம், பிராஞ்சிய மொழி, ஜப்பான் மொழி, சீன மொழி, சிங்களம், ஆங்கிலம் (பாட எண்: 73), பாளி, அராபிய மொழி, சமஸ்கிருதம், ஜேர்மன் மொழி, விவசாய தொழில்நுட்பம், நாடகமும் அரங்கியலும்.

d. கணினி விஞ்ஞானமாணி (B Sc) சிறப்புப் பட்டம்- நான்கரை ஆண்டுகள், (ஆண்)
2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரணசித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்

e. மென்பொருள் பொறியியல்மாணி சிறப்புப்பட்டம்.- நான்கரை ஆண்டுகள், (ஆண்)
2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரணசித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடையவர்கள்.
இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

f. கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம். நான்கரை ஆண்டுகள், (ஆண்)
2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒருபாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள்.
இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

g. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் - மூன்றரை ஆண்டுகள், (ஆண், பெண்)
2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், கணிதம் அல்லது வர்த்தகம் எனும் ஏதாவதொரு பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

h. முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி - மூன்றரை ஆண்டுகள், (ஆண்)
2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

i. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி (BSc)- மூன்றரை ஆண்டுகள், (ஆண், பெண்)

2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதாவது பாடப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

j. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி, மூன்றரை ஆண்டுகள், (ஆண்)
2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதாவது பாடப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

k. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் ( B Arch) - ஐந்தரை வருடங்கள், (ஆண்)
2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்திகள் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையையும் பெற்றவர்கள் இதற்குத் தகுதியுடையவர்கள்.

(i) பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு பாடம்
உயிரியல்
உயர் கணிதம்
இரசாயனவியல்
பௌதீகவியல்
இணைந்த கணிதம்
சித்திரம்
புவியியல்

அத்துடன்

(ii) எஞ்சியிருக்கும் பாடம் / பாடங்கள் பின்வரும் பட்டியிலிலுள்ளன.

| | |
|---|---|
| கணக்கியல், | அளவையியலும் விஞ்ஞான முறையும் |
| இந்து நாகரிகம் | கணிதவியல் |
| வணிக புள்ளிவிபரவியல், | சமஸ்கிருதம் |
| இஸ்லாமிய நாகரிகம் | ஜேர்மன் மொழி |
| கிரேக்க உரோம நாகரிகம் | அரபிய மொழி |
| அரசறிவியல் | வரலாறு |
| ஆங்கிலம் (பாட எண்: 73) | வியாபாரக் கற்கைகள் |
| சிங்களம் | ஜப்பான் மொழி |
| கிறிஸ்தவ நாகரிகம் | பொருளியல் |
| தொடர்பாடலும் ஊடக கற்கைகளும் | பாளி |
| ஹிந்தி | பிராஞ்சிய மொழி |
| பௌத்த நாகரிகம், | தமிழ் |
| மனைப்பொருளியல் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| சீன மொழி | விவசாய விஞ்ஞானம் |

அத்துடன்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் கணிதத்தில் திறமைச்சித்தி அல்லது க.பொ.த (உ./த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி என்பதுடன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தினால் நாடாத்தப்படுகின்ற 'வெளி அறிகைநிலை' எனும் பரீட்சையில் சித்தி.

l. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் -நான்கரை ஆண்டுகள், (ஆண்)

2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணிதப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள்.

m. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்- நான்கரை ஆண்டுகள், (ஆண்)

2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

பின்வரும் பாடங்களில் ஆகக் குறைந்தது ஏதாவது ஒரு பாடத்தில் சித்தி,

இணைந்த கணிதம் / உயர் கணிதம்

அத்துடன், கீழே குறிப்பிடப்படும் பட்டியலிலிருந்து ஏனைய பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

| | |
|---|---|
| கணக்கியல் பொருளியல் | வணிகப் புள்ளிவிபரவியல் |
| வியாபாரக் கற்கைகள் | பௌதிகவியல் |
| | இரசாயனவியல் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | |

இத்தகைமைகளுடன் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அ. கணித பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தி.
ஆ. விஞ்ஞான பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்தி.

n. தகவல் தொழில்நுட்வியல்மாணி சிறப்புப்பட்டம் - நான்கரை ஆண்டுகள், (ஆண்)

2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் தொழிநுட்ப துறை பிரிவு தவிர்ந்த ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

o. தகவல் முறையியல்மாணி சிறப்புப்பட்டம்- நான்கரை ஆண்டுகள், (ஆண்)

2019 அல்லது 2018 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் தொழிநுட்ப துறை பிரிவு தவிர்ந்த ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

3.5. தெரிவுசெய்யப்பட்ட பயிலிளவல்கள் (cadets) அப்பாடநெறிகளுக்குரிய பொதுவான பாடங்களுக்கு மேலதிகமாக அந்தந்த பாடநெறிகளுக்கு பிரயோகிக்கத்தக்கதாக ஆங்கிலம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் முதலிய பாடங்களை கட்டாயமாக பயிலுதல் வேண்டும்.

3.6. அத்துடன் இவர்கள் தமது கற்கைநெறிகளின் போது உடல்வாண்மை விருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ளுவதற்கும் வேண்டப்படுவர்.

4. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிக்குத் தேவையான ஏனைய தகைமைகள்.

தேருநர்கள்:

அ. இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
ஆ. 2020.02.14 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள்:

இ. க.பொ.த. (உ/த) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

அத்துடன்,

i. பொதுப் பொதுவறிவுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
ii. அனைத்து கற்கைகளுக்கும் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (C) பெற்றிருத்தல் கட்டாயமானதாகும்.
iii. இலங்கை வான்படைக்குரிய கல்வித் தகைமைகள். ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றில் திறமைச் சித்தியும் சிங்களம் அல்லது தமிழில் சாதாரண சித்தியும் அடங்கலாக ஒரு அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் தெரிவுப் பாடங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது).

ஈ. குறைந்தபட்சம் பின்வரும் உடல் அளவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

| | | இராணுவம் | | கடற்படை | | வான்படை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உயரம் | MBBS | 5′ 6″ | 5′ 3″ | 168 cm | 160 cm | 5′ 5″ | 5′ 3″ |
| | ஏனைய பட்டங்கள் | 5′ 6″ | 5′ 3″ | | | 5′ 6″ | 5′ 4″ |
| பாரம் | | 50 Kg | - | 52 kg | 41kg | -- | -- |
| BMI | | - | - | - | - | <26 and >17 | <25 and >17 |
| மார்பு | | 32″ (விரிவடையாதது) | - | 81 cm | - | 32″ (Min. 81 cm) | - |

| | கண் பார்வை தெளிவு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இராணுவம் | | கடற்படை | | வான்படை | | | |
| இடம் | வலம் | இடம் | வலம் | இடம் | வலம் | If specs use | நிறப் பார்வை |
| 6/9 | 6/6 | 6/6 | 6/6 | 6/6 | 6/6 | Without | CP 2 |
| Without Lenses | | Without Lenses | | | | | |

**குறிப்பு**: (விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்திலான சாதனைகளை அல்லது அதற்கீடான வேறு செயற்பாடுகளை பரீட்சார்த்தி கொண்டிருந்தால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவர் ஆகியோரினால் மேற்படி உடலளவு நியமங்கள் தளர்த்தப்படலாம்)

உ. பரீட்சார்த்தி அவசியப்படும் மருத்துவ நியமங்களை உறுதிப்படுத்த வேண்டும் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவருமானவரின் திருப்திக்கு ஏற்ப வேண்டப்படுத்தப்பட்ட மாதிரிக்கமைய மருத்துவப் பிரகடணப் படிவத்தை சமர்ப்பித்ததன் பின்னர், மருத்துவ சோதனையில் சித்தியடையுமாறு வெற்றிகரமான பரீடசார்த்திகள் வேண்டப்படுவர். விண்ணப்பதாரியொருவர் மருத்துவப் பிரகடணப் படிவத்தில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார் என தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால், அவர் தகுதியற்றவராக்கபடுவதுடன் பொய்யான தகவல்களை வழங்கியமை எனும் விதியின் கீழ் தண்டனைக்குரியவராவார்.

(மருத்துவ உறுதிமொழிப் படிவத்தினை பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.)

ஊ. பரீடசார்த்தி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் ( எந்தவொரு பயிலிளவலும் பயிற்சியின் கீழ் உள்ள காலப்பகுதியில் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதுடன் படை சேவை ஒழுங்கு விதிகளின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் அவர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்)

5. சேவை நிபந்தனைகள்.- தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை அல்லது சூரியவெவ தெற்கு வளாக பயிலிளவல் (Officer Cadet) உத்தியோகத்தர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றின் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டவர்கள். சேர்த்துக் கொள்ளப்படும் தேருநர்கள் கிரமமான படைகளில் இணைப்புச் செய்யப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான பன்னிரெண்டு (12) வருடங்களுக்கு குறையாத கட்டாயமான காலப்பகுதி சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், மருத்துவ (MBBS) பட்டத்திற்காக தெரிவு செய்யப்படுகிற பயிலிளவல்கள் அவர்கள் பட்டம் பெற்ற காலத்திலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான (20) இருபது வருட சேவையை அவர்கள் அமர்த்தப்படுகிற படைத்துறைக்கு சேவையாற்ற வேண்டும். அத்தோடு, கல்விக் காலத்தில் மருத்துவ பின்னணி மற்றும் ஏனைய காரணிகளின் நிமித்தம் விடுவிப்போருக்காக பட்டம் வழங்கப்பட மாட்டாது.

6. பல்கலைக்கழக அனுமதி செய்யும் நேரத்தில், பரீட்சார்த்திகள் மேற்கூறியபடி குறித்த பட்டத்தைப் பெற்ற பின்னர் குறித்த காலப்பகுதியில் கட்டாய சேவை செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணையொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ளல் வேண்டும்.

7. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூ. 38,000/= கொண்ட சம்பளமும் படியும் கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டணமின்றி பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்:

(i) உணவு மற்றும் தங்குமிடம்
(ii) சீருடைகள்
(iii) அதிகாரியின் வேலையாள் வசதிகள்
(iv) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
(v) மருத்துவ வசதிகள்

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு இணைப்புச் செய்யப்படுகையில், சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்:

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும்:

(i) தகைமைப் படி
(ii) பங்கீட்டுப்படி
(iii) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கான படி (திருமணமான அலுவலர்களுக்கு மட்டும்)
(iv) சீருடை பராமரிப்புப் படி

(ஆ) வேறு வசதிகளும் கொடுப்பனவுகளும்:

(i) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடும்போது இலவச தங்குமிடவசதி
(ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி
(iii) சீருடைப் படி
(iv) அதிகாரியின் வேலையாள் படி

9. தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு முறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் பின்வரும் கட்டளைகள் கையாளப்படும்.:

(i) தரைப்படை/ கடற்படை/ விமானப்படையின் சம்பளக் கோவை.
(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்.
(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப் படையின் நடை முறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை.

10. பயிற்சியின் காலத்தின்போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரினால்விபரிக்கப்பட்டதுபோல்அல்லதுசம்பந்தப்பட்டபடைத்தளபதிகளாலும்குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் வேண்டப்படுவர்.

11. பயிற்சியின் கீழுள்ள பயிலிளவல் (Cadet) அலுவலர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் எந்தவொரு பகுதிக்கும் பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு பாத்திரவாளியாவார்கள்.

12. பயிற்சிபெறும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் உள்ளே வாழுமாறு வழங்கப்பட்ட இடவசதியில் வாழுமாறும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்ட வழக்கமான வேலை முறையைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

13. மொழித் தேவைப்பாடுகள் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படும் ஏதாவது சட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்குமாறு தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

14. ஆளடையாளத்தை நிரூபித்தல்.- தேருநர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவார்கள். இந்நோக்கத்திற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அல்லது மோட்டார் வாகனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

15. விண்ணப்பங்கள் – www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்குள் சென்று இணையநிலையில் (Online) விண்ணப்பிக்கலாம் அல்லது பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து விண்ணப்ப படிவத்தை தரவிறக்கம் செய்யலாம்.

i. நீங்கள் www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்கு சென்று இணையநிலையிலேயே விண்ணப்பிக்க வேண்டும். உங்களது இலகு நன்மை கருதி பல்கலைக்கழக இணையத்தளத்தில் செய்கை வழி காட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழக இணையத்தளத்திலிருக்கும் விதிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பபடிவங்களை பூர்த்தி செய்து pdf வடிவத்தில் அச்செடுக்கவும். பெற்ற விண்ணப்பத்துடன் பிறப்பத்தாட்சிப் பத்திரம், க.பொ.த (சா.தரம்), க.பொ.த (உ. தரம்), பல்கலைக்கழக அனுமதிக்கான "ஆம்" என்பதற்கான பத்திரம் என்பனவற்றின் பிரதிகளை உறுதிப்படுத்தி இணைத்து பதிவுத் தபாலில் அனுப்பவும். அத்தோடு விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் போது, "உப வேந்தர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" சார்பில் இலங்கை வங்கி, மொறட்டுவை - இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் "9405831" இற்கு வரவு வைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,000/= (ஆயிரம் ரூபா) தொகையினை கொடுப்பனவு செய்வதன் மூலம் தாங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

அல்லது

ii. விண்ணப்பப்படிவத்தினை சரியாகப் பூர்த்திசெய்து, பிறப்பத்தாட்சிப் பத்திரம், க.பொ.த (சா.தரம்), க.பொ.த (உ. தரம்), பல்கலைக்கழக அனுமதிக்கான "ஆம்" என்பதற்கான பத்திரம் என்பனவற்றின் பிரதிகளை உறுதிப்படுத்தி அத்துடன் "உப வேந்தர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" சார்பில் இலங்கை வங்கி, மொறட்டுவை - இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் "9405831" இற்கு

வரவு வைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,000/= (ஆயிரம் ரூபா) தொகையினை கொடுப்பனவு செய்வதன் மூலம் தாங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு என்பனவற்றை விண்ணப்பத்துடன் இணைத்து குறித்த முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் சரிவர நிரப்பப்படாத அல்லது இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது. உபவேந்தரவர்களால் நியமனம் செய்யப்படும் தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படும் நியதிகளுக்கு இணங்க, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ள அபேட்சகர்களிடையே பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறுவதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் ஆரம்ப நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

16. தரவிறக்கம் செய்து சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் அல்லது இணையநிலையில் நேரடியாக அனுப்பிய விண்ணப்பத்தின் பிரதிகளை "பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை" எனும் முகவரிக்கு 2020.02.14 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தருக்கான விண்ணப்பம்" என்பதையும் விண்ணப்பித்துள்ள கற்கைப் பிரிவையும் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

17. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/கூட்டுத்தாபன/ நிலைய தலைவரினூடாக சமர்ப்பிக்கவேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து விடுவிப்புச்செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக்கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

18. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான தரங்களை கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற வேறு சோதனைகளில் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்ளப்படுவார்கள். இறுதித் தெரிவானது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட இறுதி சபையினால் மேற்கொள்ளப்படும்.

19. நேர்முகப் பரீட்சைகளுக்கும் ஏனைய சோதனைகளுக்கும் தெரிவு செய்யப்படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன எழுத்து மூலம் அல்லது பல்கலைக்கழக இணையத்தளத்தில் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படக்கூடிய பிரயாண அல்லது வேறு செலவினங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

20. தேருநர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். தேருநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக எவ்வழியிலேனும் செல்வாக்குப் பரப்புரை செய்தல் அத்தேருநருக்கான தகைமையீனமாக கருதப்படும்.

21. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி இப்பல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்படமாட்டாது.

22. வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையே ஏதேனும் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமானி அறிவித்தலைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்ன.
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு மற்றும்
முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

1-761

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## பொருட்கள் விற்பனைவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம் -திருகோணமலை**
**வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை- 2020.01.29.**

திருகோணமலை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் , உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2020.01.29 ஆந் திகதி அன்று பி.ப. 3.00 மணிக்கு கிண்ணியா பொலிஸ் நிலைய வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இவ்வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் (ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்).

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏலவிற்பனையிலிருந்து குறித்த பொருட்களை மீளப்பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

4. வழக்குச் சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினை செலுத்தி அதனை வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்படல் வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எம். எச். எம். ஹம்ஸா,
நீதிவான்/மேலதிக மாவட்ட நீதிபதி.

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை.

**பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள வழக்குச் சான்றுப் பொருட்களின் விபரங்கள்**
**நீதிவான் நீதிமன்றம்- திருகோணமலை - 2020.01.29**
**ஏல விற்பனை நடைபெறும் இடம்: கிண்ணியா பொலிஸ் நிலைய வளாகம்**

| தொ. இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருட்களின் விபரங்கள் | அளவு |
|---|---|---|---|
| | | **மணல்** | |
| 01. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | ஆற்று மணல் | 130 கியுப் |
| 02. | MC3349/19 | கிரவல் | 3 கியுப் |
| 03. | MC4012/19 | கிரவல் | 3 கியுப் |
| | | **சிப்பித் தூள்கள்** | |
| 04. | MC1302/18 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 50 |
| 05. | MC2126/18 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 19 |
| 06. | MC3288/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 190 |
| 07. | MC2320/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 270 |
| 08. | MC4010/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 25 |
| 09. | MC4095/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 165 |
| 10. | MC4847/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 75 |
| 11. | MC4848/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 250 |
| 12. | MC4978/18 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 100 |
| 13. | MC5547/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 300 |
| 14. | MC6014/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 03 |
| 15. | MC5036/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 227 |
| 16. | MC5035/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 228 |
| 17. | BR 2701/14 | தோணி | 01 |
| 18. | BR 1099/18 | பழுதடைந்த படகு | 01 |
| 19. | MC 731/15 | பழுதடைந்த படகு | 01 |
| 20. | AR 327/19 | பழுதடைந்த படகுகள் | 08 |

1- 781/1

---

**நீதிவான் நீதிமன்றம் -திருகோணமலை**
**வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை- 2020.01.30.**

திருகோணமலை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் , உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2020.01.30 ஆந் திகதி அன்று பி.ப. 3.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இவ்வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் (ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்).

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏலவிற்பனையிலிருந்து குறித்த பொருட்களை மீளப்பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

4. வழக்குச் சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினை செலுத்தி அதனை வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்படல் வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எம். எச். எம். ஹம்ஸா,
நீதிவான்/மேலதிக மாவட்ட நீதிபதி.

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை.

**பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ள வழக்குச் சான்றுப் பொருட்களின் விபரங்கள்**
**நீதிவான் நீதிமன்றம்- திருகோணமலை - 2020.01.30**

| தொ. இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருட்களின் விபரங்கள் | அளவு |
|---|---|---|---|
| | | **மணல்** | |
| 01. | MC21/20, MC24/20, MC22/20, MC5816/19, MC5439/19, MC5026/19, MC 4926/19. MC 4798/19, MC 4750/19, MC 4749/19, MC 4554/19, MC 4555/19, MC 5514/19 | ஆற்று மணல் | 13 கியுப் |
| 02. | வழக்கிழக்கம் தெளிவில்லாத | ஆற்றுமணல் ( சீனக் குடா பொலிஸ்நிலைய வளாகம்) | 4 கியுப் |
| 03. | MC5402/19 | கடல் மணல் அடங்கிய பசளை உறை 08, சவள்01 | 09 |
| | | **கிரவல்** | |
| 04. | MC5438/19, MC5359/19, MC5221/19, MC5223/19, MC5222/19, MC4623/19, MC4622/19, MC3378/19. | கிரவல் | 24 கியுப் |
| | | **சிப்பித்தூள்கள்** | |
| 05. | BR1193/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 300 |
| 06. | BR1195/19 | சிப்பித் தூள்கள் 50 Kg அடங்கிய பசளை உறைகள் | 600 |
| | | **வாகனங்கள்** | |
| 07. | MC4245/15 | டாடா ( Tata bata) பட்டா வர்க்க லொறி பதிவிலக்கம் : EPLG 4864 | 01 |
| | | **ஏனையவைகள்** | |
| 08. | MC1343/17 | கருப்பு நிற சம்சுங் M 290 KS கையடக்கத் தொலைபேசி | 01 |
| 09. | AR 57/15 | சம்சுங் DOUS வர்க்க கருப்பு நிற கையடக்கத் தொலைபேசி | 01 |
| 10. | AR 1023/18 | சம்சுங் வர்க்கCE 0168 வெள்ளை நிற கையடக்கத் தொலைபேசி | 01 |
| 11. | AR 1052/19 | லுமாலா வர்க்க 69941154 துவிச்சக்கர வண்டி01 | |
| 12. | MC4565/07 | ஒமேகா (Omega) வர்க்க துவிச்சக்கர வண்டி 01 | |
| 13. | AR 1244/19 | இரும்புத் துண்டங்கள் 11 | |
| 14. | AR 1053/19 | S.F. 400 வெள்ளை நிற பிளாஸ்டிக் தராசு 01, பித்தளை பொருட்கள் 184, பச்சை மற்றும் மஞ்சல் நிறங்கலந்த துணி பை01, நிக்கல் கலர் கோப்பை 01. | 187 |
| 15. | MC6114/19, MC6115/19, MC6010/19, MC6008/19, MC6013/19, | | |

| தொ. இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருட்களின் விபரங்கள் | அளவு |
|---|---|---|---|
| | MC4604/19, MC4394/18, MC4554/19, MC4555/19, MC4135/19, (வழக்கிலக்கம் தெளிவில்லாத- 02.) | சவள்கள் | 12 |
| 16. | MC4798/19 | பெரிய இரும்பு வாளி 02, மண்வெட்டி 01, சவள் 03 | 06 |
| 17. | MC 23/20 | மண்வெட்டி 01, சவள் 01 | 02 |
| 18. | MC 21/20 | மண்வெட்டி 01, சவள் 01 | 02 |
| 19. | MC6034/19 | சவள் 03, மண்வெட்டி 04 | |
| 20. | MC 5251/18 MC 5250/18 | பெரிய சுத்தியல்கள் | 02 |
| 21. | MC 4701/17 | பொப்லர் | 01 |
| 22. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | கோடரிகள் | 11 |
| 23. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | மரம் அறுக்கும் கை வாள்கள் | 09 |
| 24. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | TCL 30 m வயர் | 01 |
| 25. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | Tools set ( பழுது பார்க்கும் உபகரணங்கள் பொதி) | 01 |
| 26. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | பரல்கள் | 10 |
| 27. | வழக்கிலக்கம் தெளிவில்லாத | செப்புக் குழாய் சுருள்கள் | 10 |

1- 781/2

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5)ஆம் பிரிவின் கீழ், நேன் லங்கா ப்ரமோன்ஸ் லிமிட்டெட் கம்பனியின் பதிவு இல. PB 4999 அதன் பதிவு செய்யப்பட்ட கம்பனி , இல. 14, ரீட் அவென்யு, கொழும்பு 7. 2019, திசெம்பர் 31 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பிரிவு 11(2) இன் படி அதன் பெயரை நேன் லங்கா ப்ரமோன்ஸ் ( பிரைவெட்) லிமிட்டெட் என மாற்றப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்ரேட் அட்வைசரி
சேர்விசஸ்
( பிரைவெட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

1- 571

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி 2019, திசெம்பர் 30 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்* : வேல குரூப் சிலோன் (பிறைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்* : பீவீ 00218907
*பதிவு முகவரி* : 15, வெள்ளவத்தை, ஹிக்கடுவ 80240

மரியற்றா சிரிவர்தன,
கம்பனிச் செயலாளர்.

1- 572

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்* : அகம்போடி மென்டிஸ் குரூப் (பிறைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்* : பீவீ 00217870
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2019.11.25
*பதிவு முகவரி* : தொரலஹேனை டீ பெக்டரி, தல்கஸ்யாய, அக்மீமன
தபால் குறியீடு : 80000

கம்பனிச் செயலாளர்கள்.

1- 582

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்* : எஸ். எம். ஜே.சி. லங்கா (பிரைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்*: பீவீ 00218090
*பதிவு செய்யப்பட்ட முகவரி* : இல.533/2, குருந்துவத்தை, 2 ஆம்ஒழுங்கை, எவரிவத்த வீதி, வத்தளை.

பணிப்பாளர்.

1- 614

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

